

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 98.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும்பாக்கம், முடிச்சூர், அயனம்பாக்கம், வேளச்சேரி, சீக்கனான் ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள் மற்றும் வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் பகுதியை அழகுபடுத்தும் பணி, என மொத்தம் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 3268 குடியிருப்புகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார் !

முதல் பக்கத் தொடர்ச்சி

செலவில் 222 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், வெரைட்டிஹால் ரோடு திட்டப்பகுதியில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 24 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 192 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

தஞ்சாவூர் மாவட்டம், வலையன் வயல் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 19 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 168 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், டாக்டர் ஜே.ஜே.நகர் பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 12 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் 108 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

**என மொத்தம் 426 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 3,268 குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல் நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. “நம் குடியிருப்பு, நம் பொறுப்பு” திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

**இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 118 திட்டப் பகுதிகளில் 4,505.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 39,915 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்தி கேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திட

# செலவினை சுருக்கிடுவோம்; சேமிப்பை பெருக்கிடுவோம்!

## ‘உலக சிக்கன நாள்’ வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, அக்.30-**

**‘உலக சிக்கன நாளை’யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் “வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திட, செலவினை சுருக்கிடுவோம்; சேமிப்பை பெருக்கிடுவோம்” என்று வலியுறுத்தியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பொதுமக்களிடையே சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்த்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் “உலக சிக்கன நாள்” கொண்டாடப்படுகிறது. மக்கள் தங்கள் வாழ்நாளில் சிக்கனமாகச் செலவு செய்து, வருவாயில் ஒரு பகுதியை சேமிப்பாக்கி, எதிர்காலத்தில் பெரும் பயனடைந்து, வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதையே இந்த “உலக சிக்கன நாள்” வலியுறுத்துகிறது.

வரவுக்கு மேல் செலவு செய்பவர்கள் வாழ்க்கையில் எத்தகைய இன்னல்களை சந்திக்க நேரிடும் என்பதனை அய்யன் வள்ளுவப் பெருந்தகை



**“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**

**இல்லாகித் தோன்றாக் கெடும்”**

என்ற குறட்பா மூலம் “ஒருவன் தனது செல்வத்தின் அளவை அறிந்து அதற்கு ஏற்றபடி வாழாவிடில் அவன் வாழ்க்கை, செல்வம் இருப்பது போலத் தோன்றினாலும் செல்வம் இழந்து வாழ்க்கைக் கெடும்” என்று கூறியுள்ளார்.

அந்த வகையில் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு அஞ்சலகங்கள் மூலம் செயல்படுத்தப்படும் சிறு சேமிப்புத் திட்டங்கள் ஒரு பாதுகாப்பு அரணாக அமைந்துள்ளது. இது சேமிப்பவர்களின் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், எதிர்பாராச் செலவுகளை எதிர்கொள்வதற்கும் பயன்படுகிறது. தனிமனிதனின் சேமிப்பு அக்குடும்பத்துக்குப் பயன்படுவதோடு மட்டும் அல்லாமல், அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் ஏதுவாகிறது. இதன் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிப் பணிகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் பங்களிப்பு சிறப்பான அளவில் அமைகிறது.

“சிறுகக் கட்டி பெருக வாழ்” என்னும் பொன் மொழிக்கேற்ப, பள்ளி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும், விவசாயிகள், தொழிலதிபர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், முறைசாராத் தொழிலில் ஈடுபடுவோர், சுய தொழில் புரிவோர், மகளிர் ஆகிய அனைவரும் அருகிலுள்ள அஞ்சலகத்தில் சேர்ந்து சேமிப்புக் கணக்கினைத் துவங்கிட இந்த உலக சிக்கன நாளில் கேட்டுக்கொள்கிறேன்.

“செலவினை சுருக்கிடுவோம், சேமிப்பை பெருக்கிடுவோம்” என்னும் உறுதி கொண்டு சிறப்பாக வாழ்ந்திடுவோம் !

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு மற்றும் பொதுத்துறை

# சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம் - கருணைத் தொகை!

## மொத்தம் 10 சதவிகித போனஸ் வழங்க – முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, அக்.30-**

**கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கிட, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்.**

இதுதொடர்பாக – சர்க்கரைத் துறை இயக்குநரின் அறிவிப்பு வருமாறு :-

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் உள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி - II ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணைத் தொகையாக 11.67% என மொத்தம் 20% போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை தொகையாக 1.67% என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 5775 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவர். மேலும், மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ரூ.411.90 இலட்சங்கள் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நடைபெற்ற தொழில் முனைவோர் கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேசுகிறார். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன், நகர்மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன்கென்னடி , மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் ஆகியோர் உள்ளார்கள்.

## 1,84,000க்கும் மேற்பட்டவர்களுக்கு நிலுவைத் தொகை - கருணைத் தொகை - போனஸ் வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மின் கழக தொ.மு.ச. நன்றி!

## பா.மணிமாறன் அறிக்கை !

*சென்னை, அக்.30-*

*ஊதிய உயர்வு நிலுவைத்தொகை - கருணைத் தொகையுடன் போனஸ் நிலுவைத்தொகையுடன் அகவிலைப்படி உயர்வு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை இணை பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு 01.12.2019 முதல் ஊதியத்தை உயர்த்தி, தற்போது ஊதிய உயர்வு 2ம் நிலுவைத் தொகை, 20 சதவீகிதம் கருணைத் தொகையுடன் போனஸ், 3 சதவீகிதம் நிலுவைத்தொகையுடன் அகவிலைப்படி உயர்வு என மின்வாரிய பணியாளர்கள் மனம் மகிழும் வண்ணம் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கியுள்ளார்.*

*முதன் முதலில் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்*

*• மின்வாரிய தொழிலாளர்களுக்கு 1970ல் முதன் முதலில் ஊதிய உயர்வு வழங்கியவர் -*

*• தொழிலாளர்களுக்கு தீபாவளி போனசுடன் கருணைத் தொகையையும் வழங்கியவர் -*

*• மின்வாரிய தொழிலாளர்கள் 1989ல் அகவிலைப்படி உயர்வை சதவீகிதத்தில் வழங்கியவர் -*

*மின்வாரிய தொழிலாளர்களுக்கு, முதன்முதலில் பல சலுகைகளை வழங்கி, தமிழக மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கும் மின்வாரிய தொழிலாளர்களின் குடும்பங்களில் ஒளி தீபம் ஏற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்*

### சலுகைகளை பறித்த அ.தி.மு.க அரசு:

*முத்தமிழறிஞர் கலைஞர் தொழிலாளர்களுக்கு வழங்கிய பல சலுகைகளை 2011-2021 ஆட்சி காலத்தில், தொழிலாளர் விரோத அ.தி.மு.க.அரசு பறித்து தொழிலாளர்களை வஞ்சித்தது.*

*• அ.தி.மு.க. ஆட்சியில் மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 2019 முதல் ஊதிய உயர்வை வழங்காமல் இழுத்தடித்தது.*

*• அ.தி.மு.க. ஆட்சியில் மின்வாரிய தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையுடன் 20 சதவீகிதம் போனஸ் ஐ 10 சதவீகிதமாக குறைத்தது.*

*• அ.தி.மு.க. ஆட்சியில் அகவிலைப்படி உயர்வை பறித்தது, இதன்மூலம் பணியில் இருப்பவர்களுக்கும், பணியில் இருந்த ஓய்வு பெற்ற மின்வாரியப் பணியாளர்களையும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியது.*

### தொழிலாளர் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு

*தமிழக மக்கள் எதிர் பார்த்தது போல 07.05.2021 ல் திராவிட மாடல் முதலமைச்சராக அன்புத்தளபதி அவர்கள் பொறுப்பு ஏற்றார். அ.தி.மு.க. அரசு தொழிலாளர் நலனில் அக்கரை இல்லாமல் பறித்த பல சலுகைகளை மீண்டும் தொழிலாளர்களுக்கு வழங்கினார்.*

*• மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு அதிமுக அரசு வழங்காமல் இருந்த ஊதிய உயர்வை மின்துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில் 01.12.2019 முதல் உயர்த்தி வழங்கி, எந்த ஒரு மாதத்தையும் விடுபடாமல் அனைத்து மாதங்களிலும், ஊதியத்தில் உயர்வை கொடுத்து, மின்வாரிய பணியாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்து சரித்திர சாதனை புரிந்தவர் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள்தான்.*

*• 10 சதவீகிதமாக அ.தி.மு.க. அரசால் குறைக்கப்பட்ட, தீபாவளி போனசை, கருணை உள்ளத்தோடு, கருணைத் தொகையுடன் 20 சதவீகிதமாக உயர்த்தி வழங்கியவர்*

*திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்கள்.*

*• அன்புத்தளபதி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றவுடன், மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கும், பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வை வழங்கி வருகிறார்கள். தற்போது 01.07.2024 முதல் 3 சதவீகிதம் உயர்த்தி 53 சதவிகீத மாக நிலுவைத் தொகையுடன் அகவிலைப்படி உயர்வை வழங்கினார்.*

*இதன்மூலம், மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு என சுமார் 84,000 பணியாளர்களும், மின்வாரியத்தில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் என சுமார் 1,00,000த்திற்கு மேற்பட்டவர்களும் அவர்களது குடும்பமும் பயன்பெற்றனர்.*

### தொழிலாளர்களின் பொற்கால திராவிட மாடல் ஆட்சி

*மின்வாரியத்தில் பணி செய்பவர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை, கருணைத் தொகையுடன் போனஸ், நிலுவைத் தொகையுடன் அகவிலைப்படி உயர்வை, எந்த ஒரு மின்வாரிய தொழிற்சங்கமும், அரசிற்கு கோரிக்கை வைக்காமலும், எந்த வித போராட்டத்தில் ஈடுபடாமலும், தொழிலாளர்களின் தேவை அறிந்து தாயுள்ளத்தோடு வழங்கியவர் பொற்கால ஆட்சி புரியும் திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்கள்.*

### நெஞ்சார்ந்த நன்றிகள் :

*கொரோனா போன்ற பேரிடர் காலங்களிலும், புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களிலும், தீவிரமாக களப்பணியாற்றி, தமிழ்நாடு மக்களுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க உழைக்கும் மின்சார வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் சார்பாகவும், தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து கொள்கிறோம்.*

*இவ்வாறு தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச., பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை இணை பொதுச்செயலாளர், பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.*



சிவகங்கை மாவட்டம், காளையார் கோவிலில் மாமன்னர் மருது பாண்டியர்களின் 223 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காளையர் கோவில் ஒன்றிய செயலாளர்கள் வே.ஆரோக்கியசாமி தலைமையில் யோக கிருஷ்ணகுமார் முன்னிலையில் தி.மு.க.வினர் மலரஞ்சலி செலுத்தினார்கள்.